# ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தை பட்டிதொட்டி எங்கும் சேர்ப்போம்!

# அடிமைகள்- பாசிஸ்டுகளின் கூட்டணியை வீழ்த்துவோம்! ஓரணியில் தமிழ்நாடு வெல்லட்டும்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**சென்னை, ஜூன்.29-**

**சென்னையில் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் தலைமையில், `ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் முன்னெடுப்பு மற்றும் பரப்புரை பயணம்' தொடர்பாக, காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

மண் – மொழி – மானம் காக்க தமிழ்நாட்டை மக்களை ஓரணியில் திரட்டுவதற்காக, கழக நிர்வாகிகள் களத்திலும் – இணையதளத்திலும் எப்படி செயல்பட வேண்டும் என்ற ஆலோசனைகளை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் துணை முதல்வர் ஆற்றிய உரை வருமாறு:-

``ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பு வெற்றிபெற இளைஞர் அணி ஆற்றவுள்ள பணிகளையும் உறுப்பினர் சேர்க்கைக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் சுயமரியாதையைக் காக்க தலைவர் அவர்கள் வரும் ஜூலை 1 அன்று தொடங்கி வைக்கவுள்ள ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தை பட்டிதொட்டி எங்கும் சேர்ப்போம். அடிமைகள்– பாசிஸ்டுகளின் கூட்டணியை வீழ்த்துவோம். ஓரணியில் தமிழ்நாடு வெல்லட்டும்!" என்று குறிப்பிட்டார்.

கடந்த ஜூன் ஒன்றாம் தேதி மதுரையில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நம் பொதுக்குழுவில் கழகத்தின் உறுப்பினர் சேர்க்கையை எப்படி அதிகரிக்க வேண்டும் என்று நம் கழகத் தலைவர் நமக்கு கட்டளையிட்டார்கள்.

குறிப்பாக தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 சதவிகித வாக்காளர்களை மேலும் கழகத்தில் இணைக்கின்ற விதமாக, அதை உறுதி செய்யும் வகையாக, ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பை நம் தலைவர் அவர்கள், தீர்மானமாக ஏற்றி நமக்கு கட்டளையிட்டார்கள். இன்றைக்கு ஒரு சிறந்த அறிவுரையும் வழங்கி இருக்கிறார்கள்.

அந்தப் பணியை வேகப்படுத்துகின்ற விதமாகத்தான், இன்றைய காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த நான்கு ஆண்டு கால கழக ஆட்சியின் செயல்பாடுகள், நம் திட்டங்கள் இதையெல்லாம் மக்களிடம் எடுத்துச் சொன்னாலே நிச்சயம் ஒரு வாக்குச்சாவடிக்கு குறைந்தது 30 சதவிகித வாக்காளர்களை, இணைப்பது ஒரு எளிமையான பணிதான்.

### உறுப்பினர் சேர்க்கை

ஒவ்வொரு வீட்டிலும், குறைந்தபட்சம் ஒரு பயனாளியாவது நம் அரசால் பயன் பெற்றவர்கள் நிச்சயமாக இருப்பார்கள். மக்களைப் பொருத்தவரைக்கும் நாம் நான்கு ஆண்டுகளில் செய்ததை மனதில் வைத்துக் கொள்ள மாட்டார்கள். நாம்தான் அவர்களுக்குத் தொடர்ந்து நினைவுபடுத்திக்கொண்டே இருக்க வேண்டும்.

கழக அரசின் பல்வேறு திட்டங்கள். காலை உணவு திட்டம், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம், நான் முதல்வன், கலைஞர் கனவு இல்லம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48 இப்படி பல்வேறு திட்டங்கள் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட ஒரு கோடியே 15 லட்சம் மகளிர்க்குக் கொடுக்கப்படுகிறது.

இந்தத் திட்டங்களை எல்லாம் தொடர்ந்து மக்களிடம் எடுத்துச்சொல்லி நினைவுபடுத்திக் கொண்டு இருக்க வேண்டும். இப்படி மக்களுக்கு நினைவுபடுத்துகின்ற நல்ல வாய்ப்பாக, உறுப்பினர் சேர்க்கையை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### மினி தேர்தல் பிரச்சாரம்

சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் பத்து மாதங்கள்தான் உள்ளது. இந்த உறுப்பினர் சேர்க்கையை ஒரு சிறிய தேர்தல் பிரச்சாரமாக கருதி, இந்தப் பணியை நாம் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும்.

தேர்தல் நேரங்களில், கடைசி நேரத்தில் கதவுச்சீட்டைக் கொடுப்பதற்காக, நாம் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்போம். அதேபோல் கழகத்தின் சாதனை விளக்க துண்டுச் சீட்டுகளை எடுத்துக்கொண்டு, ஒரு திண்ணைப் பிரச்சாரம் போல, இந்த உறுப்பினர் சேர்க்கையை நடத்தினால், நிச்சயம் கழகத் தலைவர் கொடுத்து இருக்கின்ற அந்த இலக்கை நாம் அடைய முடியும்.

அப்படிச் செல்லும் பொழுது, ஒரு முப்பது பேர், 40 பேர் என்று கூட்டமாக செல்லாமல், நமக்குள் பிரித்துக் கொண்டு நான்கு ஐந்து பேர்களாக, இந்தத் தெருவுக்கு நான் பொறுப்பு எடுத்துக் கொள்கிறேன் என்று, நமக்குள் பொறுப்புகளைப் பிரித்துக் கொண்டு, அனைத்து வீடுகளுக்கும் ஏறி இறங்கினால் நிச்சயம் இந்த இலக்கை நாம் அடைய முடியும்.

நான்கு ஐந்து பேர்களாக செல்லும்பொழுது, மக்களிடம் அந்த துண்டறிக்கைகளைக் கொடுத்து, அவர்களிடம் உரையாடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

நாம் செல்லும்போது அவர்கள் அந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்து இருந்தால் அதைப் பற்றி சொல்வார்கள், அதை கேளுங்கள். அவர்களிடம் குறைகள் நிச்சயமாக இருக்கும். அவர்கள் குறைகளும் சொல்வார்கள். அந்தக் குறைகளை எல்லாம் காது கொடுத்து கேளுங்கள். அதை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் அளவில் அதை சரி செய்ய முடியுமா என்று பாருங்கள். அப்படி இல்லை என்றால் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களிடமும், அமைச்சரிடமும் அல்லது தலைமைக் கழகத்திற்குச் சொன்னாலும் அதை சரி செய்வதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடுவோம்.

இப்படி ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று மக்களிடம் நாம் பேசும்போது, நம் மீது அவர்களுக்கு இன்னும் நம்பிக்கை வரும். நம் கழகத்தில் மாவட்டக் கழகம் தொடங்கி, பாகம் வரைக்கும் நிர்வாகிகள் மட்டுமே லட்சக்கணக்கானோர் இருக்கிறார்கள். குறிப்பாக, ஒவ்வொரு பாகத்திலும், நூறு வாக்காளர்களுக்கு ஒரு பாக உறுப்பினரை நாம் நியமித்து இருக்கிறோம்.



இளைஞர் அணியை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு பாகத்திற்கும், ஒரு இளைஞரைத் தேர்வு செய்து, பயிற்சியும் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அதேபோல் மற்ற அணிகளிலும், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வரை நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி அனைத்து நிர்வாகிகளையும் கலந்து நியமித்து, இந்த பாகத்திற்கு இத்தனை நிர்வாகிகள் பொறுப்பு என்று அறிவித்து உறுப்பினர் சேர்க்கைக்கு வீடு வீடாகச் சென்றால், நம் தலைவர் அறிவித்து இருக்கிற காலக்கெடு ஜூலை இரண்டிற்குள் நிச்சயம் இந்த இலக்கை நம்மால் எளிதாக அடைந்து விட முடியும்.

உங்களிடம் நான் தயவு செய்து கேட்டுக் கொள்வது, நீங்கள் வீட்டில் இருந்தபடியே இந்த உறுப்பினர் சேர்க்கையை செய்து விடக்கூடாது என்று தான் உங்களிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தவறை நாம் செய்து விடக்கூடாது.

இளைஞர் அணியைப் பொறுத்தவரைக்கும் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர்வாரியாக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அனைத்து மாவட்டங்களுக்கான அறிவிப்பும் முரசொலியில் வந்துவிட்டது. இப்படி பல்வேறு அணிகளுக்கான அறிவிப்பும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் கருத்தியல் ரீதியாகவும் சரி, களத்தில் எப்படி பணியாற்ற வேண்டும் என்ற வழிமுறைகளையும், பயிற்சிகளையும் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல சமூக வலைதளங்களில் எப்படி செயலாற்ற வேண்டும் பயிற்சியும் ஒவ்வொரு மாவட்டமாக தொடர்ந்து வழங்கிக் கொண்டு வருகிறோம்.

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சியை இளைஞர் அணி சார்பாக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இளைஞர் அணிக்கு தற்பொழுது ஊராட்சி கிளைகள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி வார்டுகளுக்கு நிர்வாகிகளை மாவட்ட செயலாளர்கள் தொடர்ந்து பரிந்துரை செய்து கொண்டு வருகிறார்கள். ஓரிரு மாவட்டங்களில் இருந்து பரிந்துரைப் பட்டியல் அன்பகத்திற்கு வந்து இருக்கிறது.

விரைவாக, அந்தப் பட்டியலை அனைத்து மாவட்ட செயலாளர்களும் வழங்கிவிட்டால், அவர்களை நியமிப்பதற்கு வசதியாக இருக்கும், இது தேர்தல் நேரத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தேர்தல் நேரத்தில் தேர்தல் பணியில் அவர்களையும் நாம் முழு வீச்சில் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் களத்தில் உங்களுக்கு பக்கபலமாக, இருந்து செயல்பட்டுவார்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அதற்கான உத்தரவாதத்தை நான் தருகிறேன்.

### கருத்தியல் எதிரி நாம்தான்!

வருகின்ற சட்டமன்றத் தேர்தல், நமக்கு மிக மிக முக்கியமான தேர்தல் என்பதை நீங்கள் அனைவரும் அறிந்ததே. பாசிச பா.ஜ.க. அரசுடன் இந்தியாவிலேயே கருத்தியல் ரீதியாக போட்டி போடக்கூடிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். ஒரே தலைவர் நம் கழகத் தலைவர் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதன் காரணமாகத்தான் நம் திராவிட மாடல அரசை எப்படியாவது வீழ்த்தி விட வேண்டும் என்று, பாசிச பா.ஜ.க. அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் எதிர்க்கட்சிகளை எல்லாம் தொடர்ந்து மிரட்டி மிரட்டி அவர்களின் அணிகளில் சேர்த்து கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் எல்லாம் தொடர்ந்து தொலைக்காட்சிகளில் ஊடகங்களில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். குறிப்பாக நம் எதிர்க்கட்சி அ.தி.மு.க.-வை எடுத்துக் கொள்ளுங்கள். நாடாளுமன்றத் தேர்தலின் போது அவர்கள் என்ன சொன்னார்கள். பாசிச பா.ஜ.க.-வுடன் இனி எதிர்காலத்திலும் கூட்டணி கிடையாது என்று சொன்னார்கள். ஆனால், இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது. இப்படி நம்மை எதிர்க்க எந்த எல்லைக்கும் செல்ல பாசிச பா.ஜ.க. துணிந்து இருக்கிறது.

ஏனென்றால், நாம்தான் பாசிச பா.ஜ.க.-விற்கு கருத்தியல் ரீதியாக உண்மையான எதிரி. நம்மை எதிர்கொள்ளவே முடியாமல் திணறுகிறது பாரதிய ஜனதா கட்சி. அதற்குக் காரணம் நம் தலைவர் அவர்கள்தான்.

### தமிழர் நலனுக்கு எதிரி பா.ஜ.க.!

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு நிதியைக் கொடுக்காமல், எவ்வளவு முடியுமோ அவ்வளவு காலதாமதம் செய்தார்கள். ஆனால் அந்தப் பணிகளை எல்லாம் நிறுத்தாமல் தொடர்வது நம் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள், நம் கழக அரசு.

அதேபோல் மும்மொழிக் கொள்கையை அறிமுகப்படுத்தினால்தான் பள்ளிக் கல்வித் துறைக்கான 2,152 கோடி ரூபாய் நிதியைத் தருவோம் என்று ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு சொன்னது. நீங்கள் 2,000 கோடி ரூபாய் இல்லை பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் உங்களின் மும்மொழிக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லிவிட்டார் நம் முதலமைச்சர் அவர்கள்.

அப்படி தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக எந்த ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதை உறுதியோடு எதிர்ப்பவர், நம் தலைவர் அவர்கள். தமிழ்நாட்டு நலனுக்காக நாம் கொண்டு வருகின்ற திட்டங்களுக்கு பாசிச பா.ஜ.க. அரசு நேரடியாகவோ அல்லது ஆளுநர் மூலமாக என்ன முட்டுக்கட்டை போட்டாலும் அதையும் தகர்த்து நீதிமன்றம் வரை சென்று போராடி திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

### தலைவர் கட்டளையை நிறைவேற்றுவோம்!

அதற்கு கழகத் தொண்டர்களின் ஆதரவும், நிர்வாகிகள் ஆன உங்களின் தொடர் செயல்பாடுகளும்தான் நிச்சயமாக முழு காரணம். அத்தகைய வலிமைமிக்க தொண்டர்களை உற்சாகமாக அரவணைத்துச் சென்று, மதுரை பொதுக்குழுவில் கழகத் தலைவர் நமக்கு கொடுத்து இருக்கின்ற கட்டளையை நாம் நிறைவேற்ற வேண்டும். அதற்கு இளைஞர் அணி களத்தில் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்ற உறுதிமொழியை உங்களுக்கு தருகிறேன். இளைஞர் அணி நிர்வாகிகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் அணி மட்டுமல்ல அனைத்து சார்பு அணிகளையும், அதில் உள்ள இளைஞர்களையும், இயக்கத்தில் உள்ள அனைத்து இளைஞர்களுக்கும் ஒரு வேலையை கொடுத்து, அதை பின் தொடர்ந்து நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கழகத் தலைவர் அவர்களின் தொடர் வெற்றிக்கு, உங்கள் அனைவரின் உழைப்பும்தான் காரணம். இத்தனை வெற்றிகளையும் விட, வருகின்ற சட்டமன்ற தேர்தல் வெற்றி மிக மிக முக்கியமானது. அதற்கு நிர்வாகிகளுக்குள் இருக்கக்கூடிய சிறு சிறு பிரச்சனைகளை, முரண்களை எல்லாம் மறந்து, கருத்து வேறுபாடுகளை எல்லாம் கடந்து நாம் அனைவரும் ஓரணியில் நின்று பணியாற்றுவது அவசியம்.

நம் கழகம் ஏழாவது முறையாக வெற்றி பெற்று, நம் கழகத் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆவதே நம் அனைவரின் ஒரே இலக்கு. அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட உறுதி ஏற்போம். ஓரணியில் தமிழ்நாடு என்று தலைவர் சொல்லி இருக்கின்ற, இந்தத் திட்டத்தை வெற்றி பெற வைத்து விட்டோம் என்றால் அதுவே சட்டமன்றத் தேர்தலில் நாம் பாதி வெற்றியை அடைந்து விட்டோம் என்பதை உறுதி செய்ததாகிவிடும்.

எனவே அதை மட்டுமே மனதில் கொண்டு, நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிகழ்வில் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும், பங்கேற்ற அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில் –

## மயிலை கிழக்குப் பகுதி பாக முகவர்கள் - பாக தொழில்நுட்ப முகவர்கள் கூட்டம்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - சி.எச்.சேகர் - கோ.வி. லெனின் சிறப்புரை!

*சென்னை, ஜூன் 29-*

இது குறித்து பகுதிச் செயலாளர் எஸ்.முரளி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

மயிலை கிழக்கு பகுதி, தி.மு.க. மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி இணைந்து ஓரணியில் தமிழ்நாடு என்கின்ற செயலி (APP) விளக்கி காணொளி காட்சி மூலமாக பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பகுதிச் செயலாளர் எஸ் முரளி தலைமையில் இன்று (29-6-2025 - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் மகிழ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது

இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., சி.எச்.சேகர் - கோ.வி. லெனின் ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

இதில் எஸ்.முனுசாமி, சீமென் சேகர், பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார்,

ஏ. தாஸ், மா.பா.அன்பு , அ.தவனேசன், வெ.வெற்றிவேல், கோ.கண்ணன், துரைப் பார்த்தி பன், பா.பொன்னுசாமி, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் ரா.கதிரவன், தொகுதி அமைப்பாளர் வி.கார்த்திக் , மயிலை

கிழக்கு பகுதி அமைப்பாளர் தி.லோகேஸ்வரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

எனவே மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த வட்ட கழக செயலாளர்கள் பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பாக தொழில்நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி கேட்டுக் கொண்டுள்ளார்.



தமிழ்நாடு முதல்வர் கழக தலைவரின் ஆணையின் படி, தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் "ஓரணியில் தமிழ்நாடு" இணையதள உறுப்பினர் சேர்க்கை பயிற்ச்சி முகாம் திருவள்ளூர் தொகுதி திருவள்ளூரில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், புதியதாக நியமிக்கப்பட்ட பாக – சமூக வளைதளமுகவர்கள் (BDA). மற்றும் பாகமுகவர்கள் (BLA2) தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் அனைவரும் இணையதள உறுப்பினர் சேர்க்கை குறித்த காணொளி திரையிடப்பட்டது. இணையதள உறுப்பினர் சேர்க்கை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. உடன் சி.சு.ரவிச்சந்திரன், கூளுர் எம்.ராஜேந்திரன், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், டி.கிறிஸ்டி, எஸ். மகாலிங்கம், உதயமலர் பாண்டியன் ஆர்.டி.இ.ஆதிசேசன், மாஸ்டர் சேகர் பா.சிட்டிபாபு, எஸ்.குமரன் உள்பட பலர் உள்ளனர்

---

பேரூர் கழக இளைஞர் அணி சார்பில் டபிள்யூ.இ.எஸ். சுகுமாரன் ஏற்பாட்டில்

## வாலாஜாபாத்தில் கலைஞர் பிறந்த நாள் விழா 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

### க.சுந்தர் எம்.எல்.ஏ. - குமரி பிரபாகரன் - தே.சிலம்பரசன் சிறப்புரை!

*காஞ்சிபுரம்.ஜூன்.29,*

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், வாலாஜாபாத் பேரூர் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் டபிள்யூ. இ.எஸ். சுகுமாரன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் மற்றும் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை ( 30.6.2025 - திங்கட்கிழமை) மாலை 6.00 மணிக்கு, வாலாஜாபாத் நேரு நகர் 11 வது வார்டில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு பேரூர்க் கழகச் செயலாளர் என்.பாண்டியன் தலைமை வகிக்கிறார். பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் டபிள்யூ. இ.எஸ்.சுகுமாரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

ஜி.சுந்தரமூர்த்தி, ஆர்.குப்புசாமி, கே.விக்டர் செல்வகுமார், எம்.அமலிசுதா முனுசாமி, கே.ஜெயசீலன், எம். சண்முகம், ஆர்.நரசிம்மன், ஜி.செந்தமிழ்ச்செல்வன், கே.தியாகராஜன், கே.பழனி, டி.பரமானந்தம், எஸ்.செண்பகவள்ளி, சத்திஷ்பாபு, ஆச்சி எஸ்.பாபு, பி.பார்த்திபன், என். சச்சுதாஸ், எஸ்.அழகு சுந்தரம், வி.குமரன், பி.நாகராஜ், எஸ். சுகன் என்கிற சுகன்தன், எஸ். ப்ரித்திவிராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் ஆயிரம் பேருக்கு நல உதவிகள் வழங்கி மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., தலைமைக் கழகப் பேச்சாளர் கள் குமரி பிரபாகரன், தே.சிலம்பரசன் ஆகியோர் பேசுகின்றனர்.

மேலும் இதில் ப.அப்துல்மாலிக், பிரபுகஜேந்திரன், பி. சேகர், ஆர்.கே.தேவேந்திரன், அ.யுவராஜ், டபிள்யூ.இ.எஸ். இல்லாமல்லி ஸ்ரீதரன், எஸ். எழிலரசி சுந்தரமூர்த்தி, வி.டி. சஞ்சய்காந்தி, பி.சுந்தரராமன், டாக்டர் எஸ்.கே. இளங்கோவன், என்.ரவி, வி.எம்.பழனி, ஏ.வி.சுரேஷ்குமார், எஸ்.நடராஜன், ஏ.மொய்தீன் ஷெரீப், டி.அன்பு, ஏ.கணேசன், வி.ராமலிங்கம், டி.பிரபாகர், பி.பூங்கொடி, எஸ்.அண்ணாதுரை, மு.க.ஜெயராமன், எம்.பழனி, டி.தெய்வநாயகி தயாளன், எம்.பன்னீர்செல்வம், க.செம்பியன், இ.பழனி, இ.எஸ்.வாசன், ஐ.கீதாலட்சுமி அகிலன், இ.அரிகிருஷ்ணன், ஏ.கே.எஸ். தனசேகரன், ஆர்.வெங்கடேசன், எம்.கருணாகரன், ஏ.முகமது இஸ்மாயில், எஸ்.கலைவாணி சின்னராஜ், எஸ். கன்னிகா பழனி, எஸ்.கமலா சண்முகம், டி.கலையரசி தேவராஜ், டி.மீனா துரை, எம். ராணிமுனுசாமி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.முகமது ஆசிப் நன்றி கூறுகிறார்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு விழா வருகிற ஜூலை மாதம் 7 ஆம் தேதி நடைபெறுவதையொட்டி, திருச்செந்தூர் கோவிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக அமைக்கப்பட்டு வரும் உணவுக் கூடங்கள், வாகனங்கள் நிறுத்துமிடம், தங்கும் விடுதிகள் மற்றும் கோவில் பிரகாரம் ஆகியவற்றை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுடன் இணைந்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆய்வு மேற்கொண்டார். உடன் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.